# (வெள்ளிக்கிழமை ஜும்ஆ பிரசங்கம்)

# அல்லாஹ்விடம் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுபவர்

## 25 முஹர்ரம் 1448 ஹிஜ்ரி - கி.பி. 10 / 07 / 2026

**முதல் உரை**

நிச்சயமாக அனைத்துப் புகழும் அல்லாஹ்விற்கே உரியது. நாம் அவனையே புகழ்கிறோம், அவனிடமே உதவி தேடுகிறோம், அவனிடமே பாவமன்னிப்பும் கோருகிறோம். மேலும் நமது உள்ளங்களின் தீமைகளிலிருந்தும், நமது தீய செயல்களின் விளைவுகளிலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம். அல்லாஹ் எவருக்கு நேர்வழி காட்டினானோ அவரை வழிகெடுப்பவர் எவருமில்லை; அவன் எவரை வழிகேட்டில் விட்டுவிட்டானோ அவருக்கு நேர்வழி காட்டுபவர் எவருமில்லை. மேலும், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணையானவர் எவருமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். மேலும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும் தூதருமாவார்கள் என்றும் சாட்சி கூறுகிறேன்.

"ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்; மேலும் நீங்கள் முஸ்லிம்களாக அன்றி மரணிக்காதீர்கள்." (அல்குர்ஆன் 3 : 102).

"மனிதர்களே! உங்களை ஒரே ஒரு ஆன்மாவிலிருந்து படைத்த உங்களது இறைவனை அஞ்சிக் கொள்ளுங்கள்; அவரிலிருந்தே அவரது துணையையும் படைத்தான்; பின்பு இவ்விருவரிலிருந்தும் பல ஆண்களையும் பெண்களையும் பரவச் செய்தான். ஆகவே அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள், அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்; மேலும் இரத்த உறவுகளையும் (துண்டித்து விடுவதிலிருந்து அஞ்சிக் கொள்ளுங்கள்). நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான்." (அல்குர்ஆன் 4 : 1).

**இறைதுதிக்குப் பின்னால் :** நிச்சயமாகச் செய்திகளில் மிகவும் உண்மையானது அல்லாஹ்வின் வேதமாகும். வழிகாட்டுதல்களில் மிக அழகியது முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலாகும். காரியங்களில் மிகக் கெட்டது மார்க்கத்தில் புதிதாக உண்டாக்கப்பட்டவைகளாகும். புதிதாக உண்டாக்கப்பட்டவை யாவும் பித்அத் (புதுமை) ஆகும். பித்அத்கள் யாவும் வழிகேடாகும். வழிகேடுகள் யாவும் நரக நெருப்பிற்கு இட்டுச்செல்லும்.

**அன்பான முஸ்லிம்களே! :** நிச்சயமாக மனிதகுலம் எதன் மீது இயற்கை குணமாக ஆக்கப்பட்டுள்ளதோ, படைப்பினங்களும் மனிதர்களும் எதன் மீது படைக்கப்பட்டுள்ளார்களோ அத்தகைய விஷயங்களில் ஒன்று: கண்ணியம் மற்றும் அந்தஸ்தின் மீதான விருப்பமாகும். உலக மக்களின் உள்ளங்களில் தனக்கென ஒரு இடம் இருக்க வேண்டும் என்பதும், பிற்காலத்தவர்களிடையே தனக்கு உயர்வும்

நற்பெயரும் கிடைக்க வேண்டும் என்பதும் மனித இயல்பாகும். இருப்பினும், ஒரு முஸ்லிம் ஆர்வம் காட்ட வேண்டியதும், அதை அடைவதற்காகப் பாடுபட வேண்டியதுமானது என்னவெனில் உண்மையான அந்தஸ்தும், மதிக்கத்தக்க கண்ணியமும் என்பது அல்லாஹ்விடம் கிடைக்கக்கூடிய அந்தஸ்தும், கண்ணியமும், உயர்வும் மட்டுமே ஆகும்.

அல்லாஹ், மூஸா (அலை) அவர்களைப் பற்றி புகழ்ந்து கூறுகிறான்: "அவர் அல்லாஹ்விடம் மதிப்புமிக்கவராக இருந்தார்." (அல்குர்ஆன்3 : 69). அதாவது அல்லாஹ்விடம் பெரும் மதிப்பும், உன்னத இடமும், அங்கீகாரமும் பெற்றவராக இருந்தார்.இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹுமா) கூறினார்கள்: "அவர் அல்லாஹ்விடம் மிகுந்த அன்பிற்குரியவராக இருந்தார், அவர் அல்லாஹ்விடம் எதைக் கேட்டாலும் அல்லாஹ் அவருக்கு வழங்காமல் இருந்ததில்லை."

இதேபோன்றுதான் அல்லாஹ்வின் தூதர் ஈஸா (அலை) அவர்களும் இருந்தார்கள்; அல்லாஹ்வுத்தஆலா கூறுகிறான்: "மலக்குகள் கூறினர்: மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் தன் தரப்பிலிருந்து ஒரு வார்த்தையைக் கொண்டு உமக்கு நன்மாராயங் கூறுகிறான்; அவருடைய பெயர் மஸீஹ் ஈஸா இப்னு மர்யம் என்பதாகும். அவர் இம்மையிலும் மறுமையிலும் மதிப்புமிக்கவராகவும், அல்லாஹ்விற்கு நெருக்கமானவர்களில் ஒருவராகவும் இருப்பார்." (அல்குர்ஆன் 3 : 45).

இவ்வாறே நமது நபி (ஸல்) அவர்களின் நிலையும் இருந்தது. அவர்களுக்கு அல்லாஹ்விடம் பேரொளியும், கண்ணியமும், உயர்ந்த அந்தஸ்தும் இருந்தது. அல்லாஹ் நினைவு கூரப்படும் போதெல்லாம் அவனுடன் நபியவர்களும் நினைவு கூரப்பட்டார்கள். அல்லாஹ்வுத்தஆலா கூறுகிறான்: "மேலும் உமக்காக உமது புகழை நாம் உயர்த்தித் தந்தோம்." (அல்குர்ஆன் 94 : 4).

அன்பான முஸ்லிம்களே! : அல்லாஹ்விடம் நெருக்கத்தையும் அந்தஸ்தையும் பெறுவதில் ஆர்வம் காட்டுவது என்பது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தன் தோழர்களிடையே தெளிவுபடுத்திய, அவர்களை எச்சரித்து விழிப்புணர்வூட்டிய மற்றும் அதை அடைந்து கொள்ளுமாறு தூண்டிய ஒரு முக்கிய விஷயமாகும்.

அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: கிராமப்புறத்தைச் சேர்ந்த ஒரு மனிதர் இருந்தார், அவருடைய பெயர் 'ஸாஹிர்' ஆகும். அவர் நபி (ஸல்) அவர்களுக்குப் பரிசுகளை வழங்குவார், நபியவர்களும் அவரை நேசித்தார்கள். அவர் தோற்றத்தில் சற்றுப் பொலிவற்றவராக (அழகற்றவராக) இருந்தார். ஒருநாள் அவர் சந்தையில் தன் பொருட்களை விற்றுக் கொண்டிருந்த போது நபி (ஸல்) அவர்கள் அவரிடம் வந்து, அவர் பார்க்காதவாறு பின்னால் இருந்து அவரைக் கட்டியணைத்துக் கொண்டார்கள். பிறகு நபியவர்கள் உரக்கக் கூறினார்கள்: "இந்த அடிமையை விலைக்கு வாங்குபவர் யார்?" அதற்கு அவர், "யா ரசூலுல்லாஹ்! அப்படியென்றால் அல்லாஹ்வின் மீது ஆணையாக, நான் சந்தையில் விற்காத மலிவான (மதிப்பற்ற) பொருளாக இருப்பேனே!" என்றார். அப்போது நபியவர்கள் கூறினார்கள்: "ஆனால், நீ

அல்லாஹ்விடம் மிகவும் விலையுயர்ந்தவன் (மதிப்புமிக்கவன்) ஆவாய்!" (நூல்: திர்மிதியின் ஷமாயில், அல்பானி (ரஹ்) அவர்கள் ச௯ஹீஹ் என கூறியுள்ளார்).

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் தோழர்களில் 'ஜுலைபீப்' என்று சொல்லப்படும் ஒரு மனிதர் இருந்தார். அவருடைய முகத்திலும் பொலிவின்மை (அழகற்ற தன்மை) இருந்தது. அவருக்குத் திருமணம் செய்து வைக்க அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் முன்வந்த போது, அவர் "அப்படியென்றால் என்னை நீங்கள் சந்தை மதிப்பு இல்லாதவனாகக் காண்பீர்களே" என்றார். அதற்கு நபியவர்கள் கூறினார்கள்: "ஆனால் நீ அல்லாஹ்விடம் எவ்விதத்திலும் மதிப்பு குறைந்தவன் அல்ல." பிறகு நபியவர்கள் அன்ஸாரிகளைச் சேர்ந்த ஒரு பெண்ணை அவருக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். (நூல்: அபூ யஃலா, (ரஹ்) அவர்கள் ஸஹீஹ் என கூறியுள்ளார்).

இத்தகைய அந்தஸ்தும் உயர்வும் தான் ஒரு முஸ்லிம் பாடுபட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டிய மார்க்க வரம்பிற்குட்பட்ட உயர்வாகும். இதற்காகப் போட்டியிடும் அடியான் புகழத்தக்கவன் ஆவான். அல்லாஹ்வுத்தஆலா கூறுகிறான்: "எனவே, போட்டியிடுபவர்கள் இதற்காகவே போட்டி போட்டுக் கொள்ளட்டும்." (அல்குர்ஆன் 83 : 26).

வுஹைப் இப்னுல் வர்த் (ரஹி) கூறுகிறார்கள்: "அல்லாஹ்வை நோக்கிய (நற்கருமங்களின்) பயணத்தில் உன்னை விட யாரும் முந்திவிடக் கூடாது என்பதில் உன்னால் முடிந்தவரை நீ உறுதியாக இரு, அவ்வாறே செயல்படு."

**அன்பான முஸ்லிம்களே! :** அல்லாஹ்விடம் மதிப்புமிக்க அந்தஸ்தைப் பெற்ற ஒரு அடியானின் ஆகப்பெரும் சிறப்புகளில் ஒன்று: அல்லாஹ்வுத்தஆலா அவனது நற்பெயரை உலகினில் உயர்த்தி, அவனது புகழை ஓங்கச் செய்கிறான். மேலும் அல்லாஹ் அவனைத் தனக்கு நெருக்கமாக்கிக் கொள்கிறான், அவன்பாலும் நெருங்குகிறான்.

அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வுத்தஆலா கூறுகிறான்: "என் அடியான் என்னை எப்படிப் பற்றி எண்ணுகிறானோ நான் அவனிடம் அவ்வாறே இருக்கிறேன். அவன் என்னை நினைவுகூரும் போது நான் அவனுடன் இருக்கிறேன். அவன் தன்னைத் தானே தனிமையில் என்னை நினைத்தால், நானும் அவனைத் தனிமையில் நினைப்பேன். அவன் ஒரு சபையினரிடையே என்னை நினைத்தால், அவர்களை விடச் சிறந்த (மலக்குகளின்) சபையில் நான் அவனைப் பற்றி நினைப்பேன். அவன் என்னை நோக்கி ஒரு ஜாண் நெருங்கினால், நான் அவனை நோக்கி ஒரு முழம் நெருங்குவேன். அவன் என்னை நோக்கி ஒரு முழம் நெருங்கினால், நான் அவனை நோக்கி இரு கைகளையும் விரித்த அளவு (பாகம்) நெருங்குவேன். அவன் என்னை நோக்கி நடந்து வந்தால், நான் அவனை நோக்கி ஓடி (விரைந்து) வருவேன்." (நூல்: புகாரி, முஸ்லிம்).

அல்லாஹ்விடம் மதிப்புமிக்க அந்தஸ்தைப் பெற்றவரை அல்லாஹ் நேசிக்கிறான். அவனது நேசத்தை வானவர்கள் மற்றும் பூமிவாசிகளிடையே பரவச் செய்கிறான். மேலும் அவனது பாதுகாப்பு, உதவி, அரவணைப்பு எப்போதும் அவருடன் இருக்கும்.

அபூஹுரைரா (ரழி) அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ் ஒரு அடியானை நேசித்தால், ஜிப்ரீலை அழைத்து: 'நிச்சயமாக அல்லாஹ் இன்னாரை நேசிக்கிறான், எனவே நீயும் அவரை நேசிப்பாயாக' என்று கூறுவான். உடனே ஜிப்ரீல் அவரை நேசிப்பார். பின்பு ஜிப்ரீல் வானத்தில் உள்ளவர்களிடம்: 'அல்லாஹ் இன்னாரை நேசிக்கிறான், எனவே நீங்களும் அவரை நேசியுங்கள்' என்று முழக்கமிடுவார். உடனே வானத்தில் உள்ளவர்களும் அவரை நேசிப்பார்கள். பிறகு பூமிவாசிகளின் உள்ளங்களிலும் அவருக்கு நல்ல அங்கீகாரம் (ஏற்புடைமை) ஆக்கப்படும்." (நூல்: புகாரி, முஸ்லிம்).

அல்லாஹ்விடம் மதிப்புமிக்கவராகத் திகழும் அடியானின் நிலை எந்தளவிற்கு உயர்கிறது என்றால், அவர் ஏதேனும் ஒரு விஷயத்தில் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறினால், அல்லாஹ் அவரது கண்ணியத்திற்காகவும், அவரது உயர்ந்த இடத்திற்காகவும் அவரது சத்தியத்தை உண்மையாகவே நிறைவேற்றி வைப்பான். அபூஹுரைரா (ரழி) அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "தலைவிரி கோலமுடைய, வாசல்களிலிருந்து விரட்டப்படக்கூடிய எத்தனையோ எளிய மனிதர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு (எதையேனும்) கூறினால், அல்லாஹ் அவர்களின் சத்தியத்தை அப்படியே நிறைவேற்றி வைப்பான்." (நூல்: முஸ்லிம்).

மகத்துவமிக்க அல்குர்ஆனைக் கொண்டு அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் ஞானமிக்க நினைவூட்டல்களைக் கொண்டு எனக்கும் உங்களுக்கும் பயனளிக்கச் செய்வானாக! நீங்கள் செவியுற்ற இந்த வார்த்தைகளைக் கூறி, எனக்காகவும் உங்களுக்காகவும் அனைத்துப் பாவங்களுக்கும் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோருகிறேன். அவனிடமே பாவமன்னிப்புக் கேளுங்கள்; நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவனாகவும், கிருபையுடையவனாகவும் இருக்கிறான்.

## இரண்டாம் உரை

அனைத்துப் புகழும் தனித்தவனான அல்லாஹ்விற்கே உரியது. இறுதி நபியான, தங்களுக்குப் பின் எந்தவொரு நபியும் இல்லாத முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக! வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணையானவர் எவருமில்லை என்று சாட்சி கூறுகிறேன். மேலும் முஹம்மத் அவர்கள் அவனுடைய அடியாரும் தூதருமாவார்கள் என்றும் சாட்சி கூறுகிறேன்.

"ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்; மேலும் நேரான (உண்மையான) சொல்லையே பேசுங்கள். அவன் உங்கள் செயல்களை உங்களுக்குச் சீராக்கித் தருவான்; உங்கள் பாவங்களையும் உங்களுக்கு மன்னிப்பான். மேலும் எவர் அல்லாஹ்விற்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிகிறாரோ, அவர் நிச்சயமாக மகத்தான வெற்றியை அடைந்து விட்டார்." (அல்குர்ஆன் 33 : 70-71).

ஒரு மனிதன் அல்லாஹ்வுத்தஆலாவிடம் உயர்ந்த அந்தஸ்தையும் இடத்தையும் பெற்றுத் தரும் ஆகப்பெரும் காரியங்களில் ஒன்று : அவனைத் தொடர்ந்து நினைவுகூர்வதும் (திக்ரு செய்வது), அவனது நினைவில் அமைதி காண்பதும், தன் நாவையும் உள்ளத்தையும் அவனது பெருமை மற்றும் மகத்துவத்தைக் கொண்டு அசைப்பதும், அவனது திருநாமங்கள் மற்றும் பண்புகளை எப்போதும் துதித்துக் கொண்டிருப்பதுமாகும்.

அல்லாஹ்வுத்தஆலா கூறுகிறான்: "ஆகவே, நீங்கள் என்னை நினைவுகூருங்கள்; நானும் உங்களை நினைவுகூருவேன்." (அல்குர்ஆன் 2 : 152). மேலும் குத்ஸியான ஹதீஸில் அல்லாஹ் கூறுகிறான்: "அவன் என்னை நினைவுகூரும் போது நான் அவனுடன் இருக்கிறேன்."

**அல்லாஹ்விடம் அத்தகைய உன்னத மதிப்பை அடைவதற்கான காரணங்களில் மற்றொன்று :** கடமையான நற்கருமங்களைச் செய்தல், சுன்னத்தான (உபரியான) காரியங்களை அதிகப்படுத்துதல், விலக்கப்பட்ட ஹராமான காரியங்களை முற்றாகக் கைவிடுதல் மற்றும் வெறுக்கத்தக்க (மக்ரூஹ்) விஷயங்களிலிருந்து தவிர்ந்து நடப்பதன் மூலம் அவனது பொருத்தத்தைப் பெற முழுமுயற்சி செய்வதாகும்.

அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் கூறினான்: "எவன் என் நேசரை (வலீயை) பகைத்துக் கொண்டானோ அவனுடன் நான் போர் பிரகடனம் செய்கிறேன். என் அடியான் நான் கடமையாக்கிய (ஃபர்ளான) காரியங்களை விட எனக்கு மிகவும் விருப்பமான வேறொன்றின் மூலம் என்னோடு நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதில்லை. மேலும் என் அடியான் உபரியான (நஃபில்) வணக்கங்களின் மூலமாக என் பக்கமே நெருங்கிக் கொண்டிருப்பான்; இறுதியில் நான் அவனை நேசித்து விடுவேன். நான் அவனை நேசித்துவிட்டால், அவன் கேட்கின்ற காதாக, அவன் பார்க்கின்ற கண்ணாக, அவன் பிடிக்கின்ற கையாக, அவன் நடக்கின்ற காலாக நான் ஆகிவிடுவேன். அவன் என்னிடம் கேட்டால் நான் அவனுக்குக் கொடுப்பேன், அவன் என்னிடம் பாதுகாப்புத் தேடினால் நான் அவனுக்குப் பாதுகாப்பு அளிப்பேன்." (நூல்: புகாரி).

**அல்லாஹ்விடம் அந்தஸ்தைப் பெறுவதற்கான வழிகளில் ஒன்று :** பயனுள்ள மார்க்கக் கல்வியைக் கற்றல், அதன்படி செயல்படுதல், அதனைப் பிறருக்குப் பரப்புதல் மற்றும் அதில் பேரார்வம் காட்டுதலாகும். இதன் மூலம் அல்லாஹ்வின் திருநாமங்கள், பண்புகள், அவன் எவற்றை நேசிக்கிறான், எவற்றை வெறுக்கிறான் என்பதை அறிந்து கொள்ளலாம். அல்லாஹ் தஆலா கூறுகிறான்: "உங்களில் ஈமான் கொண்டவர்களுக்கும், கல்வி ஞானம் வழங்கப்பட்டவர்களுக்கும் அல்லாஹ் அந்தஸ்துகளை உயர்த்துகிறான்." (அல்குர்ஆன் 58 : 11).

**அல்லாஹ்வின் அடியார்களே!** அதன் பின்பு நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், ஒரு முஸ்லிம் தன் துஆக்களில் நபிமார்களுடைய அல்லது சாலிஹானவர்களுடைய அந்தஸ்தைக் கொண்டு தவஸ்ஸுல் (இடைத்தரகராக) ஆக்குவது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதல்ல. "யா அல்லாஹ்! நான் உன்னிடம் முஹம்மது நபியின் அந்தஸ்தைக் கொண்டு அல்லது இன்னாரின் அந்தஸ்தைக் கொண்டு கேட்கிறேன்" என்று கூறுவது கூடாது. ஏனெனில், இத்தகைய செயலை நபித்தோழர்கள் (ரழி) நபியவர்களின் வாழ்நாட்களிலோ அல்லது அவர்களின் மரணத்திற்குப் பின்னரோ செய்யவில்லை. அவர்களிடையே பிரபலமான எந்தவொரு பிரார்த்தனையிலும் இத்தகைய வாசகங்கள் அறியப்படவில்லை.

மாறாக, ஒரு முஸ்லிம் குர்ஆன் மற்றும் சுன்னாவில் வந்துள்ளபடி, அல்லாஹ்வின் அழகான திருநாமங்களைக் கொண்டோ (அஸ்மாவுல் ஹுஸ்னா), அல்லது தான் செய்த நற்கருமங்களைக் கொண்டோ இறைவனிடம் தவஸ்ஸுல் செய்ய வேண்டும். இதுவே மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட தவஸ்ஸுல் முறைகளாகும்.

யா அல்லாஹ்! உன்னுடைய அடியாரும் நபியுமாகிய முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது சாந்தியும் சமாதானமும் பொழிவாயாக. நேர்வழி பெற்ற உன்னத கலீஃபாக்கள் மீதும், முஃமின்களின் அன்னையராகிய நபியின் மனைவியர் மீதும், ஏனைய அனைத்துத் தோழர்கள் மீதும், மறுமை நாள் வரை அவர்களை அழகிய முறையில் பின்பற்றுவோர் மீதும் உனது பொருத்தத்தை வழங்குவாயாக! கொடையாளிகளில் மிகச் சிறந்தவனே! உனது பெருந்தன்மையைக் கொண்டு எங்களையும் அவர்களுடன் சேர்த்துப் பொருந்தி கொள்வாயாக!

யா அல்லாஹ்! உன்னை நினைவு கூரவும், உனக்கு நன்றி செலுத்தவும், உன்னை மிக அழகிய முறையில் வணங்கவும் எங்களுக்கு உதவி செய்வாயாக! யா அல்லாஹ்! எங்களது தாய்நாடுகளில் எங்களுக்குப் பாதுகாப்பைத் தருவாயாக. எங்களது தேசங்களில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை என்னும் அருட்கொடையை நிலைத்திருக்கச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்களது அமீர் அவர்களுக்கும், இளவரசருக்கும் உனது நேர்வழியின் பால் தவ்ஃபீக் செய்வாயாக! அவர்களின் செயல்களை உனது பொருத்தத்திற்கு உகந்ததாக ஆக்குவாயாக! அவர்களுக்கு ஆரோக்கியம், ஈமான் மற்றும் நல்வாழ்வு என்னும் ஆடையை அணிவிப்பாயாக! இத்தேசத்தையும் ஏனைய அனைத்து முஸ்லிம் தேசங்களையும் அமைதியும் நிம்மதியும் நிறைந்ததாக ஆக்குவாயாக! எங்களது இறுதிப் பிரார்த்தனை அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்விற்கே அனைத்துப் புகழும் என்பதாகும்.

**ஜும்ஆ தொழுகைக்கான மாதிரி உரை தயாரிப்புக் குழு.**